## நவம்பர் மாத ஆராதனை ஒழுங்குகள்

| நாள் | நேரம் | தலைப்பு | வேதபாடங்கள் | செய்தியளிப்பவர் |
|---|---|---|---|---|
| 01.11.2016 செவ்வாய் | காலை 5.30 மணி | வாக்குதத்த ஆராதனை | - - | அருள்திரு. டேனியல் செல்லதுரை |
| 06.11.2016 ஞாயிறு | காலை 8.30 மணி | திருவிருந்து ஆராதனை இந்தக்குழந்தை எப்படிப்பட்டதாக இருக்குமோ | நியாதி 13: 1-14 லூக்கா 1: 57 - 66 | அருள்திரு. டேனியல் செல்லதுரை |
| 13.11.2016 ஞாயிறு | காலை 8.30 மணி | திராட்சை செடிகளும் கொடிகளும் | எசே 37 : 15 - 23 யோவான் 15:1 -8 | அருள்திரு. டேனியல் செல்லதுரை |
| 20.11.2016 ஞாயிறு | காலை 8.30 மணி | பெண் குழந்தையின் மாண்பினை உறுதி செய்தல் | எண்ணிக்கை 27:1 - 1 மாற்கு 5: 35 - 43 | திரு. பால் பன்னீர் செல்வம் |
| 26.11.2016 சனி | மாலை 5.30 மணி | **ஆண்டுவிழா / திடப்படுத்தல் ஆராதனை** | | பேரருள்திரு. அறிவர் **ஜெயராஜ் ஜார்ஜ் ஸ்டீபன்** |
| 27.11.2016 ஞாயிறு | காலை 8.30 மணி | இறைவாக்கின் கொண்டாட்டம் | I சாமு 2:1 -10 லூக்கா 1:39 - 45 | திரு. ஜோசப் |

# நவம்பர் மாதம் - 2016

# ஆயர்மடல்

அருமை திருச்சபை குடும்பத்திற்கு இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் என் வாழ்த்துகளை தெரிவித்துக்கொள்கிறேன். இம்மாதம் ஆசீர்வாதமாக அமைவதற்கு இறைவன் அருள் புரிவாராக.

நமது திருச்சபையின் பல்வேறு எதிர்கால நலத்திட்டங்களை நினைத்து திருச்சபையின் வளர்ச்சியிலும் இறைமக்களின் ஆவிக்குரிய மறுமலர்ச்சியிலும் பூரணமாக வளர நம்மை ஈடுபடுத்திக் கொள்வதற்கு பரிசுத்த ஆவியானவர் நம்மில் செயல்பட ஆசீர்வாதத்தோடு நம்மை ஒப்புவிக்க அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். ஐக்கிய குழுக்களும் மற்ற சங்கங்களும் திருச்சபையினுடைய ஆவிக்குரிய அமைப்பு வளர்ச்சிக்கும் அமைப்பின் எதிர்கால திட்டங்களுக்கும் நீங்கள் உதாரத்துவத்தோடு ஈடுபடுவது மட்டுமல்ல, உங்கள் அனுதின ஜெபங்களில் தனித்தனியாக, குடும்பம் குடும்பமாக ஈடுபடுவது இன்றியமையாதது என்பதை ஆழ்ந்த அனுபவத்தோடு எடுத்துச் சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன். நமது திருச்சபையின் சேகர குழுவாக, திருச்சபையின் அமைப்புக்கும் எதிர்காலத்தின் முன்னேற்றத்திற்கும் ஆர்வத்தோடு சிந்தித்து தங்களை ஆதாரப்பூர்வாமான செயல்களில் ஈடுபட பரிந்துரை செய்யப்படுகிறது. வளர்ச்சிக்கு ஒவ்வொரு தனிப்பட்ட குடும்பமும், ஆத்துமாவும் ஜெப வாஞ்சையுடன் திருச்சபையின் மொத்த வளர்ச்சியில் ஆர்வத்தோடு ஈடுபட உங்களை அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். கடந்த மாதம் நடைபெற்ற நமது திருச்சபையின் ஊழியங்களில் திரளாய் பங்கு பெற்றதற்காக என்னுடைய நன்றி களை தெரிவித்துக் கொள்கிறேன். இந்த மாதம் முழுவதும் நடைபெறும் ஊழியங்களில் அனைவரையும் ஈடுபடுத்தி கொள்ள அழைக்கப்படுகிறீர்கள். ஜெபியுங்கள், பங்கு பெறுங்கள், பகிர்ந்து கொடுங்கள், கடவுளின் ஆசி என்றென்றும் தங்குவதாக.

இம்மாதம்26ம் தேதி நடைபெறும் ஆண்டு விழாவிற்க்காக ஜெபியுங்கள் பங்குபெறுங்கள்.

ஆண்டவரின் அருட்பணியில்

**Rev.Daniel Chelladurai**

# BIRTHDAYS IN THE MONTH OF NOVEMBER

| | | | |
|---|---|---|---|
| November 1 | Mrs.Meroline Albert | November 15 | Miss.T.Teena Jercy |
| | Miss .T. Mercy Jeevarthina | November 17 | Mrs. Evangelin Benjamin |
| | Baby.S.mellona | | Mr.G.K.David |
| November 2 | Mr.Rohan Charles | November 18 | Mrs. Gnanammal |
| | Miss.J.Jesintha Jebamalar | | Baby. Fiona Agnes |
| November 4 | Mr.H.J.Santhose Raj | November 20 | Mrs. Stella Deborah |
| November 6 | Mr.Ranjit Samuel | November 21 | Master .A. John Peter |
| | Dr. R.Anish Daniel | November 23 | Ms. Pearlin |
| | Mr.T.N.Brejin | | Mr.R.Kinson Raja |
| November 9 | Mrs.Lancy Charles | | Mr.R.Raja Singh |
| November 10 | Mrs. Manju Violet Elizabeth | November 25 | Mr. T.N.Blessin |
| | Mr.E.Titus Jacob | November 26 | Mr.R.Golden Bennet |
| November 11 | Mr.P.Jeffrey Matthew | | Mrs. Valsamma |
| | Master.G.Bento Thomas | November 27 | Ms. Bernoclove |
| November 12 | Miss.J.Hannah Josephine | November 28 | Dr. W.Hannah Melki |
| November 13 | Mr. C.Sam Vincent | | Mrs.Mercy Ida Frankline |
| November 14 | Dr. Nisha Daniel.R | | Mr.G.R.Clement |
| | Mr.S.D.Samson | November 29 | Mr.Blesslin V.Shine |
| | Mr. Manuel Raj Stephen | November 30 | Mrs. Mercy Edwin |
| | | | Mrs.Blesslin Sheeba |

# WEDDING DAYS IN NOVEMBER

| | |
|---|---|
| November 1 | Mr. E. B. Anbazhagan & Mrs. A. Glory Anbazhagan |
| November 12 | Mr.M.Rohan Charles & Mrs. Bernoiclove |
| November 22 | Mr. A. Moses & Mrs. S. Kalyani |
| November 27 | Mr. V. Praveen Babu & Mrs. P. Selvamani |
| November 27 | Mr. D. Baskar & Mrs. Esther Juliet |
| November 27 | Mr. A. Alwin Jackson & Mrs. G. Evangelin Lincy |

**பிறந்த நாள் மற்றும்**
**திருமண நாள் கொண்டாடும்**
**அனைவருக்கும் திருச்சபையின் சார்பில்**
**வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறோம்!**





# திருச்சபையும் - நற்செய்தி பணியும்

ஹென்றி மார்ட்டின்



18.02.1781 - 16.10.1812

மாபெரும் தேர் ஊர்வலம் அது. மக்கள் கூட்டம் அலைமோதியது. தேர்ச் சக்கரத்தின் அடியில் சிறுவன் ஒருவன் விழுந்தான். சிறிது நேரத்தில் துடிதுடிக்க இறந்தான். சில நிமிடங்களுக்குள் பலர் தானாகவே அச்சக்கரத்தினுள் விழுந்து தங்கள் உயிரை மாய்த்துக் கொண்டனர்.

இதயம் வேகமாய் துடிதுடிக்க அச்செயலை தடுத்து நிறுத்த முடியாமல் திகைத்தான் 24 வயது நிரம்பிய ஒரு வாலிபன். இந்தியாவின் இதயங்களை கிறிஸ்துவுக்கு நேராக திசை திருப்ப. இங்கிலாந்திலிருந்து வந்த ஹென்றி மார்ட்டின் என்பவரே அந்த வாலிபர்.

கணவன் இறந்தவுடன் மனைவியும் எரிக்கப்படும் அகோரக் காட்சிகளையும் கண்டு ஆத்திரம் கொண்டார். மூடத்தனங்களினால் மக்கள் சிக்குண்டு இருப்பதைக் கண்டு வேதனை அடைந்தார். இதனை அகற்றும் வழி என்னவென சிந்திக்கலாயினார்.

வேதாகம புத்தகம் மட்டுமே இவர்களை மூடத்தனத்திலிருந்து விடுவிக்க முடியும் என்பதை வில்லியம் கேரி அவர்கள் மூலம் அறிந்துகொண்டார்.

ஹிந்தி, வங்காளம் பாரசீகம், சமஸ்கிருதம், அரேபியம் போன்ற மொழிகளைக் கற்று அம்மொழிகளில் வேதாகமத்தை மொழிப்பெயர்த்தார்.

இஸ்லாமியர்கள் மத்தியில் மிகவும் சிறப்பாக பணியாற்றினார். ஐந்து பள்ளிகளை ஆராம்பித்தார். அரேபிய மொழியில் வேதாகமத்தை கொண்டுவர அரும்பாடுபட்டார். சற்றும் ஓய்வில்லாமல் உழைத்தால் அவர் உடல் பல வீனப்பட்டது.

இந்தியாவிலிருந்து பெர்சிய சென்று வேதாகமத்தை அரேபிய மொழியில் வெளியிட்டார். கால நிலைகள் உடலை முற்றிலும் காயப்படுத்தின. உள்ளத்திலோ உறுதியுடன் காணப்பட்ட இவர் தனது 31ம் வயதில் மரித்தார். இம்மாபெரும் மிஷனெரி இதே தினத்தில் பிறந்தார்.

அன்பரே! இளம் வயதில் இயேசுவுக்காக என்ன சாதனை புரிகிறீர்?

தொகுப்பு
**EVA. பால் பன்னீர் செல்வம்**

19.11.2016 சனிக்கிழமை அன்று மாலை 7.00 மணிக்கு
**ஆண்டுவிழா ஆராதனை நடைபெறும்**

# கீதங்களை புரிந்து பாடலாமா?

<u>கிறிஸ்தவ கீதங்களின் வரலாறு</u>

## சீர்திரியேக வஸ்தே

<u>கீர்த்தனை எண்.4</u>

**பூரிகல்யாணி** **ஆதிதாளம்**

**ஆசிரியர்: அருள்திரு. ஞா.சாமுவேல் ( 1850 - 1927)**

ஆசிரியர் குறிப்பு : கும்பகோணம் - கருப்பூர் கிராமத்தில் 18.09.1850இல் பிறந்தார். இவரின் பாட்டனார் சேதுபதி மன்னரின் அமைச்சர். தந்தை ஞானாச்சரியம் நாவலர் பட்டம் பெற்றவர். மகன் தரங்கம்பாடியில் மெட்ரிகுலேசன் பயின்று பின் தமிழ் கற்க தருமபுரி ஆதீன சைவ மடத்தில் மாணவரானார். 1877இல் அந்துமன் மிஷனரி மூலம் லுத்தரன் கல்லூரியில் இறையியில் கற்றார். ஜெர்மன் மொழியிலும் தேர்ச்சி பெற்றார். 1878இல் தரங்கம்பாடியில் அருட்பொழிவு பெற்று காரைக்கால் மணிக்கிராமம், பொறையார் ஆகிய இடங்களில் போதகராக இருந்து இறையியல் கல்லூரியல் ஆசிரியரானார். பாடலியற்றி காலட்சேபம் செய்வதிலும் அருளுரையாற்றுவதிலும் சிறந்தவர்.

பணி: இந்திய வேதாகமச் சங்கத்தின் விவிலிய மொழி பெயர்ப்பு பணிக்கு, டாக்டர் லார்சன் ஐயர் தலைமையில் லுத்தரன் சபை சார்பாகப் பணியாற்றினார். அருணோதயம் மாத இதழின் ஆசிரியர். பெங்களூர் ஐக்கிய இறையியல் கல்லூரியிலும், சென்னை குருக்கள் இறையியல் கல்லூரியிலும் பணியாற்றினார் சத்தியவேத பாயிரம் சுவிசேஷ கீர்த்தனைகள் உள்ளது நாற்பது திருவிருந்தாடி, தூபகலசம், பாலர் பூச்சரம் கதாமலர்க்கூடை , சிறுகதை நூல்கள், சமயோசித வேதக் குறிப்புகள், நறுமலர்க்கொத்து லூத்தர் சரித்ரம், பிரசங்கப் புத்தகம் மற்றும் பல அரிய நூல்களையும், கள்ளுக்கு மிளுரும் நகைச்சுவை நூலையும் எழுதியுள்ளார். ஆசிரமப் பாமலை நூலுக்கு நேரிசை வெண்பாவில் முகவுரை அளித்துள்ளார், மேற்கத்திய இசைக் பாடல்களை சீர்த்தனைகளாக்க வழிகாட்டியவர். உம்மைத் துதிக்கிறோம் யாவுக்கும் என்ற 2ஆம் பாமாலையை ஏழாம் கீர்த்தனையாக, துதிக்கிறோம் உம்மை வல்ல பிதாவே என்று சங்கராபரணம் ராகத்தில் கீர்த்தனையாக்கியவர். 20.05.1927இல் நித்திரையடைந்தார்.

கிடைத்துள்ள 94 கீர்த்தனைகளில் 26 கீர்த்தனைகள் சி.எல்.எஸ். இல் இடம் பெற்றுள்ளமை இவரின் சிறப்பை விளக்கும், தரங்கம்பாடி அச்சகத்தை பொறுப்பேற்று பல நூற்களை வெளியிட்டார்.இசையார்வமுடையவர். தமிழ் ஆங்கிலம், ஜெர்மனி ஆகிய மொழிகளில் புலமைமிக்கவர். இவரது பாடல்களில் சொல்லழகும், பொருளழகும், திறமறைத் தெளிவும், பளிச்சிடும் இறையியலும், யாப்புடன் இணைந்து சீருடன் அமைந்துள்ளன.

பாடற்குறிப்பு: பூரிகல்யாணி ராகத்தில் மிகவும் பெருமையுடன் பாடக்கூடிய இப்பாடலின் பல்லவியில் மூன்று மொன்றான பிதா, குமாரன் தூய ஆவி (சீர்) - அழகிய, உயர்ந்த சிறப்பான, ஒழுங்கான ( திரி = மூன்று, யேக = உன்றான வஸ்து = பொருள் - பரம்பொருளாம் இறைவனுக்கு ( நமோ) - வணங்குகின்றேன். நமோ என்பது நாமம். பெயர், நமஸ்காரம், நமஸ்கரிக்கிறேன் என்ற பொருளில் விளங்கும்.



அனுபல்லவியில்: (பாரி) உலகம் ( படைத்தாளும் நாதர்) படைத்து ஆளுகை செய்யும் (நாதர்) - கடலுளே (சற்குரு) சத்குரு ஞானாசிரியர் (பிரசாதர்) ஆலயங்களில் அளிக்கப்படும் அடையாள உணவு. திருவிருந்து என்று நாமுணர வேண்டும். (நூருறும்) - மணமளிக்கும் (தூய வேதர்) திருமறையின் வேதத் தலைவனே உம்மை வணங்குகின்றேன். (வேதர்) வேதாந்தன் - வேத மூலன், வேத வினோதன் வேதத்தை நிறை வேற்றினவர், வேத நாயகன் என பலவாறு விளங்கிக் கொள்ளலாம்.

சரணம் 1 : தந்தை ( பராபரனே) பரன் + அபரன் என்று பிரித்தால் அபர, உபர என்று வானுலகும் என பொருட்கொண்டு வானுலகத் தந்தையே ( எனைத் தாங்கி விழாதபடி ஆதரிப்பவரே, (சொல்லரும் நலம் ஈந்தாய்) உமது ஒரே திருமைந்தனை ( என்தவிர்) என் பாவாங்களைப் போக்க இவ்வுலகுக்கு அனுப்பித் தந்தாய் இவ்வன்பினை தியாகச் செயலை விவரிக்க யாரால் முடியும்? என பிதாவையும்,

சரணம் 2 : எங்கள் பாவத்தின் ( நாசர்) அழிப்பவரே (புது எருசலேம்) மோட்சமாகிய தேவனுடைய பரலோக ராஜ்ஜியத்தின் அரசரே (வெளி: 21:2, எபே-1:23, எபி-11:10) (துங்கமந்தையில் சேர்) உலகமனைத்தும் உம்மை விசுவாசிக்கும் குடும்பமாகிய திருச்சபையில் சேர்ந்து அனைவரும் உம் தியாகத் திருப்புகழைப் போற்றித் துதிக்க என குமாரனைப் போற்றுகிறார்.

சரணம் 3: ஆவிமயமான தேவனே, நான் தடுமாறி பாவத்தில் விழாதபடி திடபெலனளித்து என்னைக் காப்பாயாக! (கரிசித்து)சரிசனையுடன் அன்பு கூர்ந்து (தா + நற்புத்தி ) நல்வெண்ணம், நல்லுணர்வு தந்து (சுபடற்ற) - உண்மையான (மனசுத்தி) மனத்தூய்மையும் (திருமொழி) வேத போதனைகளை ஏற்று பக்தியாய் வாழ உதவி செய்யும் எனத் தூய ஆவியானவரை வேண்டுகிறார். மூன்று சலணங்களிலும் மூவரைப் போற்றி ( திரியேக) என ஒன்றான (வஸ்து) - பொருள் பரம்பொருள், இறைவனை நமஸ்கரிக்கின்றார்.

குறிப்பு: நமோ என்ற சொல் 28 முறை பயன்படுத்தி இயைபுத் தொடையும் இரண்டாம் சரணத்தில் சிறப்பு மோனையும் அமைத்துள்ளார்.

**- Nishada's**

ஆதாரம்: CLS Publications

**"ஜெபம் மனிதனை தேவனுக்கு முன்பாக விழ வைத்து பிற மனிதர்களுக்கு முன்பாக நிமிர்ந்து நிற்கச் செய்கிறது"**

# வேத வினா - விடை போட்டி

## நவம்பர் மாத கேள்விகள்

## யார் யாரிடம் எப்பொழுது கூறியது?

## ( வசன ஆதாரம் தரவும் )

1. அவர்களால் கூடாமற்போயிற்று
2. இதோ உம்முடையதை வாங்கி கொள்ளும்
3. ஒரு வேளை கர்த்தர் நமக்காக ஒரு காரியம் செய்வார்
4. அப்படியானால் நாங்கள் என்ன செய்ய வேண்டும்
5. நான் அந்நிய தேசங்களில் கிணறு வெட்டிக் தண்ணீர் குடித்தேன்.
6. நீங்கள் பேசாமலிருந்தால் நலமாடும் அது உங்களுக்கு ஞானமாயிருக்கும்?
7. கர்த்தருடைய வார்த்தைகளில் ஒன்றாவது தரையிலே விழுவதில்லை?
8. இந்த பாவத்தை எங்கள் மேல் சுமத்தாதிரும்?

**கீழ்கண்ட எண்கள் எதைக்குறிக்கின்றன வசன இருப்பிடம் தரவும்?**

9. 1000 + 7000 + 20000 = 27900 = 100
10. 6800 + 7100 + 4600 + 1 + 3700 + 1 + 22 ?

**விடைகள் வந்து சேர வேண்டிய கடைசி நாள் 20-11-2016**

விடைகள் அனுப்ப வேண்டிய முகவரி

**C.S.I. இயேசுவில் புதுவாழ்வு ஆலயம்**
எண் 55, 3வது மனை பிரிவு,
ஆசிரியர் குடியிருப்பு,
லட்சுமிபுரம், சென்னை – 600 099.

குறிப்பு: தெளிவான முகவரியுடன்
சந்தா எண்ணையும் சேர்த்து எழுதி அனுப்பவும்

csinewlifeinjesus@gmail.com 9444 633129
**www.csinewlifeinjesus.org**

## பாராட்டுகிறோம்

ஆச்சி **Sing The Season** போட்டியில்
அரையிறுதி வரை சென்ற பாடகற் குழுவை
திருச்சபையின் சார்பாக பாராட்டுகிறோம்



# சென்ற மாத போட்டியின் விடைகள்

1. ஆயுததாரி – I சாமு 24: 22
2. ராஜா – 2கொரி 11:32
3. அம்மோனியர் – 2 நாளா 24:26
4. கிணறு – 2 சாமு 17,18
5. ராகேல் – I சாமு 10: 2
6. செங்குத்தானபாறை – I சாமு 14: 4
7. கூடாரங்கள் – ஆப 3 : 7
8. கானானிய ராஜா எண் 21: 133: 40
9. இருப்புக் காலிலாய் – உபா 4: 20
10. எத்தியோப்பியன் – 2 நாளா 14: 9

## சரியான விடை எழுதியவர்கள்

1. திருமதி. எஸ்தர் சந்தோஷ்ராஜ்
2. திருமதி. கலா சுந்தரகுமார்
3. திருமதி. ஜாய்ஸி விமலா
4. திருமதி. லீலா டிக்சன்
5. திருமதி. ஜூபிலி தர்மராஜ்
6. திருமதி. ஸ்விட்டிலீன் ரிச்சர்ட்
7. திருமதி. ரோஸ்லெட் செல்லன்
8. திருமதி. மெரில் ஜெமிமா

## படித்ததில் பிடித்தது

**பேசாதே! பேசாதே!!**

1. ஏழைக்கு முன்னால் நின்று கொண்டு உனது செல்வம் பற்றி பேசாதே!
2. நோயாளிக்கு முன் நின்று கொண்டு உன் ஆரோக்கியத்தைப் பற்றி பேசாதே!
3. பலவீனனுக்கு முன்னால் நின்று உனது பலம் பற்றி பேசாதே!
4. மகிழ்ச்சியை இழந்தவனுக்கு முன்னிருந்து கொண்டு சந்தோஷம் பற்றி பேசாதே!
5. சிறைக்கைதிக்கு முன் நின்றிருந்து உன் சுதந்திரம் பற்றி பேசாதே!
6. குழந்தை பாக்கியமற்றவனுக்கு முன் நின்று கொண்டு உன் குழந்தையைப் பற்றி பேசாதே!
7. அநாதைக்கு முன் நின்று கொண்டு உனது தந்தையைப் பற்றி பேசாதே!

அவர்களது காயங்களை இதற்கு மேல் அவர்களால் சுமக்க முடியாது போய்விடும்

**A.Joseph**

# திடப்படுத்தல் ஆராதனை

*மற்றும்*

# திருச்சபை ஆண்டுவிழா

## தேதி: 26.11.2016,   சனிக்கிழமை

## நேரம்: மாலை 5.30 மணி

**சிறப்பு செய்தி**

## பேருள்திரு. அறிவர்.

# ஜெயராஜ் ஜார்ஜ் ஸ்டீபன்

## (பேராயர், சென்னை பேராயம்)

## அனைவரும் வருக! இறையாசீர் பெறுக!!



## கிராம ஊழியம் - சோராஞ் சேரி

கர்த்தரின் கிருபையில் கடந்த 23.10.2016 அன்று ஆவடி - பட்டாபிராம் இடையே அமைந்துள்ள சோராஞ்சேரி என்கின்ற கிராமத்திற்கு மாலை சுமார் 4.00 மணிக்கு ஆயர். டேனியேல் செல்லதுரை ஐயா அவர்களுடன் சபையராக ஊழியத்திற்கு புறப்பட்டுச் சென்றோம்.

மிகவும் இயற்கை எழில் நிறைந்த அருமையான கிராமம். அங்கே எந்த சபையும் கட்டப்படவில்லை. அங்குள்ள சில கிறிஸ்தவர்கள் நம்மை அன்போடு எற்றுக் கொண்டு தேனீர் வழங்கினார்கள். பிறகு ஒவ்வொரு வீதியாக பாடல்கள்பாடி, கர்த்தருடைய வசனத்தை அறிவித்தோம்.

நம்முடன் வந்த பெண்கள் ஐக்கிய சகோதரிகள் வீடு வீடாக சென்று மக்களை சந்தித்து சுவிசேஷம் அறிவித்தனர். மேலும் வியாதியுள்ள மக்களுக்காகவும் பிசாசின் பிடியிலுள்ள மக்களுக்காகவும், ஜெபித்தனர் ஊழியன் மிகவும் ஆசீர்வாதமாக இருந்தது. ஸ்தோத்திரம்

**- Co-ordinator**

சிறப்புக் கட்டுரை

## தென்னிந்திய திருச்சபை உருவான வரலாறு.

**சென்ற மாத தொடர்ச்சி**

தென்னிந்திய ஐக்கிய சபையுடன் சென்னை, மதுரை மலபார் யாழ்பாணம் கன்னடா, தெலுங்கு மற்றும் திருவரங்கூர் மாமன்றங்களும் மெத்தடிஸ்டு திருச்சபையின் தென்னிந்திய பிராந்தியத்தின்  சென்னை, திருச்சி, ஹைதராபாத், மைசூர் மாகாணங்களும், இந்தோனேசியா, பர்மா, சிலோன் சபையான ஆங்கிலிக்கன் பாரம்பரிய சபையின் சென்னை, டோர்னக்கல், திருநெல்வேலி, திருவிதாங்கோடு மற்றும் கொச்சின் திருச்சபைகள் ஒன்றாக இனைந்தன.

1947 ஆம் ஆண்டு முதல் ஆராதனை St.George Cathedral  ஆலயத்தில் நடைபெற்றது. பாடப்பட்ட முதல் பாட்டு

**“கர்த்தாவே யுகமயுகமாய்**
**எம்துனை ஆயினீர்”**

First Speech Declaration: முதல் வேதபாட பகுதி

எபேசியர் 2: 20 - 22

**RT.REV.CK.JACOB**
Bishop Anglican diocese of Travancore & Cochin

தென்னிந்திய திருச்சபையானது 14 பேராயங்களோடு 10 லட்சம் மக்களோடும்  ஆரம்பிக்கப்பட்டது. இன்று 22 பேராயங்களோடு 3.8 மில்லியன் உறுப்பினர்களை கொண்டுள்ளது. இதில் தமிழ்நாடு 8 , ஆந்திரா 6, கேரளா 4, கர்நாடக 3, இலங்கை 1.

**நான்கு கோட்பாடுகள்:**

1. பேராயர் ஆளுகை முறைமை.
2. திருமுழுக்கு, திருவிருந்து – சாக்கிரமெந்துகள்
3. அப்போஸ்தல, நிசேயா விசுவாச பிரமாணங்கள்.
4. புதிய மற்றும் பழைய ஏற்பாடு – முழு வேதாகமம்

**சின்னம்:**

1. சிலுவை
2. தாமரை
3. நெருப்பு

**1.சிலுவை:** + 4 திருச்சபைகள் சம ஆளுகை
அனைவரும் சமம் (சாதி, இனம், நிறம், மொழி)

**2.தாமரை:** தேசிய மலரான தாமரைப்போல இந்திய கலாச்சாரத்தில் ஊன்றி வளர வேண்டும். சேற்றுக்குள் பூக்கின்ற செந்தாமரை போல பாவமான உலகில் தூய வாழ்விற்கு முன் மாதிரியாக மிளிர்கின்ற சபையாக தென்னிந்திய திருச்சபை வளர வேண்டும்

தாமரை தண்ணீரில் இருந்தாலும் நீர் ஒட்டாதது போல திருச்சபையும் சமுதாய தீமைகளில் கறைப்படாமல் அதே நேரம் அலைகளை எதிர்த்து போராடும் சபையாக விளங்க வேண்டும்.

**3.நெருப்பு இதழ்கள்** : தூய ஆவியானவரின் செயல்பாட்டை சித்தரிக்கிறது.

**நோக்கம்:**

**அவர்கள் எல்லாரும் ஒன்றாய் இருப்பார்களாக**

யோவான் 17: 21

**- A.Joseph** M.Sc.,M.A.,BBA.,DMLT.,
Lay Preacher / Lay Leader

(பல்வேறு நூல்களை மையமாக வைத்து எழுதப்பட்டது)



# எதற்காக ஜெபம்?

ஜெபம் என்ற வார்த்தைக்கு மந்திரம் என்றுதான் அர்த்தம். ஆனால் ஜெபம் என்பது ஆன்மீக வாழ்வில் மந்திரம் அல்ல. அது ஒரு ஆவிக்குரிய வழி. அந்த வழியில் போகிறவர்கள்தான் தேவனுடைய எந்த ஒரு மேன்மையான நன்மையைப் பெற்று அனுபவிக்கும் வாய்ப்பினைப் பெறுகின்றனர். நான் ஆராய்ந்து பார்த்த வரைக்கும் ஜெபம் என்ற வழிக்குப் பதிலாக இறை நன்மைகளை மனிதன் அனுபவிக்க வேறு வழிகள் இருப்பதாகத் தெரியவில்லை.

பரிதாபகரமாக இன்றைய கிறிஸ்தவ மக்கள் தங்களுடைய வாழ்வின் நன்மைகளுக்காக இறைப் பணியாளர்களின் ஜெபங்களை சார்ந்து நிற்கின்றார்கள். நாம் நேரடியாகச் சென்று பெறும் விதமாக வைக்கப்பட்டுள்ள ஒரு நன்மையை வேறொருவரை அனுப்பிப் பெற விரும்புவது போல அது உள்ளது. ஜனங்கள் காணிக்கை என்ற பெயரில் கட்டணம் கட்டி தங்களுக்காக ஜெபிக்கும் மனிதர்களைத் தேடுகின்றார்கள்.

அவர்கள் இறைப்பணியாளர்கள் இருக்கும் இடம் தேடிச் சென்று ஜெபித்துக் கொள்கின்றார்கள். இறைப்பணியாளர்களை இல்லங்களுக்கு அழைத்து வந்து ஜெபிக்கக் கேட்டுக் கொள்கின்றார்கள். ஆனால் அவர்கள் ஜெபிக்க இயலாதவர்களாகவும், ஜெபித்தாலும் அதன் மேல் நம்பிக்கையற்றவர்களுமாக உள்ளனர்.

ஜெபம் என்பது ஒரு இறைத் தொடர்பு சாதனம். நாம் தேவ உறவை உணர்வதற்காகவே ஜெபம். நாம் தேவ ஐக்கியத்தில் வளர்வதற்காகவே ஜெபம். நாம் தேவ உறவை நமக்குள் உறுதிப்படுத்தி உற்சாகம் அடைவதற்கே ஜெபம். நம்முடைய இதயப் பாரங்களை இறைவனின் பாதத்தில் இறக்கி வைத்துவிடவே ஜெபம். நாம் தேவனுடைய இளைப்பாறுதலை நமக்குள் கொண்டு வரவே ஜெபம்.

தேவ அன்பையும், தேவ அமைதியையும். தேவ சந்தோஷத்தையும் நமக்குள் கொண்டு வருகின்ற பைப்லைன் தேவ ஊழியர்களின் ஜெபங்கள் அல்ல. அவை நம்முடைய ஜெபங்களே. தேவ ஊழியர்களின் ஜெபங்களே. தேவ ஊழியர்களின் ஜெபங்கள் வாயிலாக நாம் ஆசீர்வாதம் தேடுகின்ற முறை, தேவனோடு நாம் உறவு கொண்டு வாழ்வதற்கான வழிகளை அடைத்துப் போட வாய்ப்புண்டு. தேவன் தம்முடைய நன்மைகளைப் பெற்றிட உங்களைத்தான் நேரில் வந்து பேச அழைக்கின்றார். அதனைப் பெற்றிட உங்கள் சார்பாக இன்னொருவரை அனுப்பாதிருங்கள். என்னுடைய ஜெபங்களை ஏன் ஆண்டவர் ஏற்கமாட்டார்? என்ற உணர்வோடு அவரிடம் நேரடியாகச் செல்லுங்கள். வழி எது? அதுதான் உங்களின் தனிப்பட்ட ஜெபம்.